**செய்தி வெளியீடு எண்: 479** **நாள்: 23.07.2018**

**தமிழ்நாடு என பெயர் சூட்டப்பட்டு 50–ஆம் ஆண்டு பொன்விழாவை முன்னிட்டு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும் தமிழ் வளர்ச்சித் துறையும் இணைந்து நடத்திய மாநில அளவிலான தடகள விளையாட்டுப் போட்டியினை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் துவக்கி வைத்தார்கள்**

••••

தமிழ்நாடு என பெயர் சூட்டப்பட்டு **50–**ஆம் ஆண்டு பொன்விழாவை முன்னிட்டு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும் தமிழ் வளர்ச்சித் துறையும் இணைந்து நடத்திய மாநில அளவிலான தடகளப் போட்டியின் துவக்க விழா இன்று **(23.07.2018)** சென்னை ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கில் நடைபெற்றது. மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு பா.பாலகிருஷ்ணா ரெட்டி அவர்கள் விழாவிற்கு தலைமை வகித்தார். மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு க.பாண்டியராஜன் அவர்கள் அணிவகுப்பு மரியாதையை ஏற்று போட்டிகளை துவக்கி வைத்து விழாப்பேரூரை ஆற்றினார். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர், திரு தீரஜ் குமார், இ.ஆ.ப. அவர்கள் தேசிய கொடியினை ஏற்றி வைத்து வாழ்த்துரை வழங்கினார். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், இ.ஆ.ப. அவர்கள் விளையாட்டுக் கொடியினை ஏற்றி வைத்து வாழ்த்துரை வழங்கினார்.

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையேற்று பேசுகையில்,**

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களால், **1967–**ஆம் ஆண்டு தமிழ்நாடு என பெயர் சூட்டும் தீர்மானம் சட்டமன்றப் பேரவையில் கொண்டு வரப்பட்டது. அதன் பின்னர், சென்னை மாநிலம் **14.01.1969** அன்று தமிழ்நாடு என அரசாணை வெளியிடப்பட்டது. தாய் தன் குழந்தைக்கு தான் பெயர் சூட்டி மகிழ்வாள் என்பது வரலாறு. ஆனால், அவ்வரலாற்றை மாற்றி மகன் தன் தாய்க்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டிய பெருமை பேரறிஞர் அண்ணா அவர்களையே சேரும். வரலாற்று சிறப்புமிக்க நமது மாநிலம் தமிழ்நாடு என்ற பெயரோடு, **50–**வது ஆண்டில் காலடி எடுத்து வைப்பதை முன்னிட்டு "தமிழ்நாடு பொன்விழா ஆண்டாக" வரலாற்றில் இடம் பெற்றது பொன்நாளாகும். தமிழகம் விளையாட்டில் சிறந்த மாநிலமாக இந்திய திருநாட்டில் திகழ வேண்டும் என்கிற மறைந்த மாண்புமிகு

முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் விருப்பத்தின்படி, தமிழக அரசானது, விளையாட்டுக்களைப் பரவலாக்குவது, சிறந்த விளையாட்டு உள்கட்டமைப்புகளை உருவாக்குவது, சிறந்த விளையாட்டு வீரர் / வீராங்கனைகளின் திறன் கண்டறிந்து அவர்கள் தேசிய மற்றும் சர்வதேச அளவில் பதக்கம் வென்று தமிழ்நாட்டிற்கும் மற்றும் இந்திய நாட்டிற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்ற வகையில் செயல்பட்டு வருகிறது. மேலும், விளையாட்டில் இளைஞர்கள் கவனம் செலுத்துவதன் மூலம் அவர்களது உடலினை வலுப்படுத்திக் கொள்ளவும், திறமைகளைக் கண்டறியவும், அதன் மூலம் அவர்கள் உயர்ந்த நிலையில் வருவதற்காக சென்னையில் ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், நேரு உள் விளையாட்டரங்கம், ஹாக்கி விளையாட்டரங்கம், டென்னிஸ் விளையாட்டரங்கம், நீச்சல்குளம் ஆகிய சர்வதேச அளவிலான விளையாட்டரங்கங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்தார்கள். அதோடு மட்டுமல்லாமல், அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட விளையாட்டு அரங்கம், நீச்சல்குளம், பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கம் போன்றவற்றையும் ஏற்படுத்திக் கொடுத்தார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசிகளோடும், வழிகாட்டுதல்களோடும், **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார்** அவர்களின் தலைமையிலான அரசு, ஆசியப் போட்டிகள், காமன்வெல்த் போட்டிகள், தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள், தேசியப் போட்டிகள், இந்திய விளையாட்டுக் குழுமப் போட்டிகள் போன்ற பல்வேறு சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் நமது மாநில வீரர்கள் பங்கேற்கும் வகையில் பல்வேறு விளையாட்டுக் கழகங்களுக்கு மான்யமும் அளித்து ஊக்கப்படுத்தி வருகிறது. 2011–2017 வரையிலான காலங்களில், பல்வேறு விளையாட்டுகளில் பங்குபெற்று சாதனை படைத்த 280 விளையாட்டு வீரர்களுக்கு ரூ.27,82,36,000/– உயரிய ஊக்கத் தொகையாக **மாண்புமிகு அம்மாவின்** அரசினால் வழங்கப்பட்டுள்ளது. சர்வதேச அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற **143** விளையாட்டு வீரர் மற்றும் 100 பயிற்றுனர்களுக்கு கடந்த ஆண்டில் **ரூ.13.45** கோடி உயரிய ஊக்கத் தொகையாக **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் அளிக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் கோப்பைக்கான மாநில அளவிலான போட்டிகளில் பங்குபெற்று வெற்றி பெறுபவர்களுக்கு பரிசுத்தொகை மற்றும் இதர செலவினங்களுக்காக ஆண்டுதோறும் ரூ.8.09 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றும் வீரர்களுக்கு முதல் பரிசுத் தொகையாக ரூ.1 லட்சம் வழங்கப்படுகிறது. கிராமப்புறங்களில் விளையாட்டின் முக்கியத்துவத்தினை உணர்த்தும் வகையில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து **12,524** கிராமங்களில் கிராம விளையாட்டு போட்டிகளை நடத்திட **அம்மாவின்** அரசு **ரூ.25.05** கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. சமீபத்தில், ஆஸ்திரேலியாவின் கோல்ட் கோஸ்ட் நகரில் நடைபெற்ற **21–வது** காமன்வெல்த் (Common Wealth Games) விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிப்பெற்ற வீரர்களுக்கு **ரூ.4.20** கோடியும், பயிற்சியாளர்களுக்கு **ரூ.63** லட்சமும், நமது மாண்புமிகு **முதலமைச்சர் அவர்கள்** வழங்கி உள்ளார்கள். தமிழ்மொழி, தமிழர்களின் வளர்ச்சி மற்றும்

அவர்களின் பெருமையைப் போற்றும் வகையில் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பாக, மாவட்ட மற்றும் மாநில அளவிலான கவிதை, கட்டுரை பேச்சுப் போட்டிகளும் மற்றும் கலைப் பண்பாட்டுத் துறையின் வாயிலாக நாட்டுப்புற நடனம், தமிழிசை வாய்ப்பாட்டு, பரதநாட்டியம் ஆகியவற்றில் மாவட்ட மற்றும் மாநில அளவிலான போட்டிகளும் நடத்தப்பட்டன. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் நடத்தப்பட்ட தடகளப் போட்டிகளில் 100 மீட்டர் ஓட்டப்பந்தயம், உயரம் தாண்டுதல் மற்றும் நீளம்தாண்டுதல் ஆகிய பிரிவுகளில் மாவட்ட அளவிலான போட்டிகளில் பங்கேற்று, முதல் இரண்டு இடங்களைப் பெற்ற விளையாட்டு வீரர் / வீராங்கனைகள், மாநில அளவிலான போட்டியில் கலந்து கொண்டுள்ளீர்கள். மாநில அளவிலான தடகளப் போட்டியில் முதலிடம் பெறும் வீரர்/ வீராங்கனைகளுக்கு, பரிசுத் தொகையாக தலா ரூ.50,000/– மற்றும் நான்கு கிராம் தங்கப்பதக்கமும், இரண்டாமிடம் பெறும் வீரர்/வீராங்கனைகளுக்கு பரிசுத் தொகையாக தலா ரூ.25,000/– மற்றும் நான்கு கிராம் தங்கப்பதக்கமும், மூன்றாமிடம் பெறும் வீரர் / வீராங்கனைகளுக்கு பரிசுத் தொகையாக தலா ரூ.10,000/– மற்றும் நான்கு கிராம் தங்கப்பதக்கமும் வழங்கப்பட உள்ளது என்பதை தெரிவித்து கொள்கிறேன். மாநில அளவிலான இப்போட்டிகளில் கலந்து கொள்ள வருகை புரிந்துள்ள வீரர்/ வீராங்கனைகள் அனைவரும் வெற்றி பெற எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு க. பாண்டியராஜன் அவர்கள் மாநில அளவிலான தடகளப் போட்டிகளை துவக்கி வைத்து பேசுகையில், மாநில தடகளப் போட்டிக்கு அனைத்து மாவட்டங்களிலும் வருகை தந்துள்ள விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். மெட்ராஸ் ராஜ்ஜியம் என்றிருந்ததை பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாடு என பெயர் சூட்டினார். தமிழ்நாடு என பெயர் சூட்டப்பட்டு 50ம் ஆண்டு தொடங்குவதை முன்னிட்டு, பொன்விழா ஆண்டாக இங்கு சீரும் சிறப்புமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விளையாட்டு வீரர், வீராங்கனைகள் விளையாட்டினை வாழ்க்கை முறையாக ஏற்றுக் கொண்டு செயல்பட வேண்டும். நம்முடைய நாட்டில் விளையாட்டு ஓர் அங்கமாக திகழ வேண்டும். பாரதியார் பாடினார் "விசையுறு பந்தினைப்போல்" என பாரதியார் அவர்கள் பாடினார்கள். "உடல் வளர்த்தேனே, உயிர் வளர்த்தேனே" என்று திருமூலர் அவர்கள் பாடினார்கள். ஏனென்றால் மனமும், உடலும் வலிமையாக இருந்தால்தான் நாம் நினைத்ததை சாதிக்க முடியும். இங்கே ஒலிம்பிக் உறுதிமொழி எடுக்கும்பொழுது மனம், மொழி, மெய் என்று அழகாக உறுதிமொழி எடுத்தார்கள். இதில் மெய் என்பது உடம்பு. உடலானது நல்ல வலிமையாகவும், மனம் திடமுள்ளதாகவும் இருந்தால்தான் வெற்றியடைய முடியும். விளையாட்டுக்கு மனம், மொழி, மெய் என்ற மூன்றும் அவசியம். உலக அளவில் நடந்த தடகளப் போட்டியில் 400 மீ. ஓட்டப்பந்தயத்தில் அஸ்ஸாம் மாநிலத்தைச் சேர்ந்த ஒரு கூலித்தொழிலாளியின் மகள் ஹிமாதாஸ் (56.46 வினாடிகள்) வியத்தகு வெற்றியைப் பெற்று இந்தியாவிற்கு பெருமை சேர்த்துள்ளார்கள். இந்தியர்கள் அனைவரும் பெருமைப்படக் கூடிய ஒன்றாகும். அதைப்போல இந்தியாவைச் சார்ந்த சாக்ஸி மாலிக்,

ஒலிம்பிக் போட்டியில் மல்யுத்தப் போட்டியில் வெற்றி பெற்று வெண்கலப் பதக்கத்தை பெற்றார். அவர் இந்தியா வந்து சேருவதற்குள் அவரது கணக்கில் பத்தரை கோடி ரூபாய் சேர்ந்தது. இதை ஏன் சொல்கிறேன் என்றால் விளையாட்டு அந்த அளவிற்கு உங்களுடைய திறமைக்கும், உங்கள் நாட்டிற்கும் பெருமை சேர்க்கும். முதலமைச்சராய் இருந்து மறைந்த புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஸ்போர்ட்ஸ் பல்கலைக் கழகம் அமைத்துக் கொடுத்தார்கள். விளையாட்டுக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி கொடுத்தார்கள். அடித்தளத்திலிருந்து வருபவர்களுக்கும் அனைத்து வகையான விளையாட்டுகளுக்கும் ஊக்கத் தொகை வழங்கினார்கள். விளையாட்டிற்கேற்ப ஊக்கத் தொகை அதிகரித்து வழங்கினார்கள். தமிழ்நாடு பொன்விழாவையொட்டி மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகிறது. தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் கவிதைப்போட்டி, கட்டுரைப் போட்டிகளும் நடைபெற உள்ளது. இந்நிகழ்ச்சிக்கு வந்திருக்கின்ற வீரர், வீராங்கனைகள், சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் வகையில் தங்களின் திறமைகளை வளர்த்து, உங்களுக்கும் நாட்டிற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

முன்னதாக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் துணைப் பொது மேலாளர் திருமதி ர. கீதாஞ்சலி ரத்னமாலா வரவேற்புரையாற்றினார். மண்டல முதுநிலை மேலாளர் திரு க. புகழேந்தி, மண்டல முதுநிலை மேலாளர் (விளையாட்டு விடுதி) திரு பா. சாமுவேல் ராஜாடேனியல், மேலாளர், மேலாளர் திருமதி ஜெ. மெர்சி ரெஜினா, மேலாளர் திரு எஸ். முருகன், ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்க அலுவலர் திரு எம். செந்தில், நேரு உள் விளையாட்டரங்க அலுவலர் திருமதி எல். சுஜாதா ஆகியோர் பங்கேற்றனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**